SLCB

இலங்கை

இணக்கப்பாட்டுப் பணியகம்



# வருடாந்த அறிக்கை 2017



# உள்ளடக்கம்


| | |
|---|---|
| இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் முகாமைத்துவ சபை - 2017 | 3 |
| இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் தூரநோக்கும் குறிக்கோள்களும் | 5 |
| 2017 ஆம் ஆண்டின் முக்கிய குறிப்புகள் | 7 |
| அறிமுகம் | 9 |
| பொதுவான செயற்பாடுகள் | 10 |
| ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் | 15 |
| சுற்றுலா சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் | 16 |
| சுற்றுலா தொழில் உறவுகள் | 20 |
| ஏனைய நடவடிக்கைகள் | 21 |
| நிதி மற்றும் நிருவாகம் | 22 |
| நிதி நிலைக் கூற்று | 23 |
| வருமானக் கூற்று | 24 |
| கணக்குக்கான குறிப்புகள் | 25 |
| ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று | 33 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 34 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 35 |



# இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் முகாமைத்துவ சபை 2017

| | |
|---|---|
| திரு பிரேம குரே | இ.மா.ப. தலைவர் |
| திரு பி. அல்கம | பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் |
| திரு எம். சாந்திகுமார் | பணிப்பாளர், இலங்கை ஹோட்டல்கள் சங்கம் |
| திரு தேவந்திர சேனாரட்ன | தலைவர், இலங்கை உள்வருகை சுற்றுலா இயக்குநர்கள் சங்கம் (SLAITO) |
| திரு ஜயதிஸ்ஸ கெஹெல்பன்னல | தவைலர், ஜோன் கீல்ஸ் ஹோட்டல் முகாமைத்துவ சேவைகள் |
| திரு மல்ராஜ் கிரியெல்ல | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை |
| திரு சுனில் திஸாநாயக்க | பணிப்பாளர் நாயகம், BMICH |
| பேராசிரியர் தீபால் மெத்திவ் | உயிரியல் இரசாயன அணுமூலக்கூறு உயிரியல் பிரிவு, மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| திரு ருவன் பி.கே. கால்லகே | தலைவர், தொழில்சார் சங்கங்களின் அமைப்பு (OPA) |
| திரு சியான் அமீன் | தலைவர், இலங்கை தொழில்சார் மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்போர் சங்கம் |
| திரு திமுத்து தென்னகோன் | பொது முகாமையாளர், இலங்கை எயார்லைன்ஸ் (வர்த்தக, செயற்பாடுகள்) |
| திருமதி தீப்தி பெர்னாந்து | மேலதிகச் செயலாளர், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு |
| திரு சரத் கஹபலஆராச்சி | தலைவர், இலங்கை வர்த்தக கைத்தொழில் கூடகங்கள் ஒன்றியம் (FCCISL) |





# இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் தூரநோக்கும் குறிக்கோள்களும்

## தூரநோக்கு

சுற்றுலா பயணிகளுக்கும் இலங்கை மக்களுக்கும் நன்மை அளிக்கும் வகையில், வலிமையான இயற்கை கலாசார மற்றும் சுற்றுலா சேவையை வழங்கக் கூடிய இரம்மியமான அழகான கடற்கரைகளையும் மற்றும் அன்புடன் உபசரிக்கும் நட்புநேய மக்களையும் உடைய இலங்கையை ஆசியாவில் மிகவும் பொக்ஷிமான மற்றும் பசுமையான ஒரு தீவாகவும் மற்றும் அதனை அதிகளவில் வெளிநாட்டு அந்நிய செலாவணியை சம்பாதிக்கும் அளவுக்கு ஆசியாவின் ஒரு சுற்றுலா கேந்திர நிலையமாகவும் தாபித்து நிலைபெறச்செய்தல்.

## செயற்பணி

இலங்கையை MICE சுற்றுலா செயற்பாடுகளுக்கான தனித்துவமான ஒரு ஸ்தலமாக சர்வதேச ரீதியில் நிலைபெறச்செய்து, தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு சாதாகமான ஒரு பங்களிப்பை நல்கச்செய்யும் பொருட்டு MICE சுற்றுலாவிலிருந்து உச்ச வருமானத்தை பெற்று, இலங்கையில் 'MICE சுற்றுலா தொழிலில்' நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுகின்ற சுற்றுலாத் தரப்புகளின் வாழ்க்கைத் தரங்களை அதனூடாக உயர்வடையச்செய்தல்.

## குறிக்கோள்கள

இந்தப் பணியகத்தின் குறிக்கோள்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தினால் (பக்க இலக்கம் 32-32 வரை) பின்வருமாறு பணிக்கப்பட்டுள்ளன.

- இலங்கையை ஒரு சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகள் என்பவற்றுக்கான சிறந்த ஒரு ஸ்தலமாகவும் மற்றும் சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஊக்குவிக்கக்கூடிய ஒரு சுற்றுலா பயண ஸ்தலமாகவும் விளம்பரப்படுத்துதல்.
- சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகள் என்பவற்றுக்கான சிறந்த ஒரு ஸ்தலமாகவும் மற்றும் சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஊக்குவிக்கக்கூடிய ஒரு சுற்றுலா பயண ஸ்தலமாகவும் இலங்கையின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டுறவு வாய்ந்த சுற்றுலா அபிவிருத்தியையும் மற்றும் சுற்றுலா சந்தைப்படுத்தலையும் உறுதிசெய்யக்கூடிய வகையில் குறித்தொதுக்கப்பட்ட பொதுவான ஒரு கொள்கையை தயாரித்து வழ்ஙகுதல்.
- ஒரு பிரயாண ஊக்குவிப்பு அம்சம் என்ற ரீதியில் சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகள் முதலிய அம்சங்களில், அரச மற்றும் தனியார் துறைகள் வழங்கும் சுற்றுலா சேவை, அந்தத் துறைகளின் மூலமான சுற்றுலா ஊக்குவிப்பு, அபிவிருத்தி என்பன போன்ற விடயங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அத்தகைய விடயங்களுக்கு உதவுதல்.
- மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகள் என்பவற்றின் வெற்றிகரமாக செயலாற்றுகையையும் அதே நேரம் ஊக்குவிப்பு பிரயாண நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றிகரமான செயற்படுத்துகையையும் உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு, இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் மாநாடு, சுற்றுலா கண்காட்சி மற்றும் ஊக்குவிப்பு பிரயாணம் என்பவற்றை ஒழுங்கமைக்கும் தரப்புகளுடன் ஒருங்கிணைந்து, கூட்டொத்துழைப்புடன் தொழிற்படுதல்.
- மாநாடுகள், கூட்டங்கள், சுற்றுலா கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு பிரயாணம் முதலிய பல அம்சங்களை கையாளுவதில் ஈடுபடும் நபர்களினாலும் மற்றும் அமைப்புகளினாலும் பின்பற்றப்பட வேண்டிய தொழில் சார்ந்த பராமரிப்பு நியமங்களை குறிப்பீடு செய்து அத்தகைய நியமங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மாநாடுகள், கூட்டங்கள், சுற்றுலா கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு பிரயாணம் முதலிய அம்சங்களை கையாளுவதில் ஈடுபடும் வித்தியாசமான வகுதி நபர்களுக்கு அல்லது வித்தியாசமான வகுதி அமைப்புகளுக்கு மத்தியில் தொழில் சார்ந்த திறன்கள் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- மாநாடுகள், கூட்டங்கள், சுற்றுலா கண்காட்சிகள் மற்றும் ஊக்கவிப்பு பிரயாணம் முதலியவற்றை அபிவிருத்தி செய்வதில் அல்லது அவற்றை ஊக்குவிப்பதில் சம்பந்தப்படும் ஏதாவது அமைப்புடன் அல்லது நிறுவனத்துடன் இணைதல், அதன் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளல் அல்லது அதனுடன் ஏதாவது ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்ளல்.
- இலங்கையை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் ஒரு சுற்றுலா பயண ஸ்தலமாக அபிவிருத்தி செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும் மற்றும் விளம்பரப்படுத்துவதற்கும் பணியகத்திற்கு வழிகாட்டுதல்.
- சுற்றுலா பயணிகளை உபசரிக்கும் சுற்றுலா அடங்கலாக சுற்றுலா சேவைகளை நிலையான ஒரு விதத்தில் போதியளவு கவர்ச்சிகரமான மற்றும் வினைத்திறன் வாய்ந்த சேவைகளாக அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தகைய சேவைகளை ஊக்குவித்தல்.
- பணியகத்தின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு அத்தகைய இடைநேர் அல்லது நடப்பு சார் செயல்கள் மற்றும் விடயங்கள் அனைத்தையும் இலங்கையில் அல்லது வேறிடத்தில் மேற்கொள்ளல்.



# 2017 ஆம் ஆண்டின் முக்கிய குறிப்புகள்

IATO (இந்திய பிரயாண இயக்கநர்கள் தரப்பு) வெளிநாட்டு சுற்றுலா மாநாடு - 2017

1-வது வெளிநாட்டு IATO மாநடு 2017 ஆம் ஆண்டு இலங்கையின் கொழும்பு நகரத்தில் நடத்தப்பட்டது. இந்த 1-வது வெளிநாட்டு IATO மாநாடு 'எல்லைகள் கடந்த பிராந்திய சுற்றுலா' என்ற தொனிப்பொருளில், இந்திய பிரயாண இயக்குநர் தரப்பும் மற்றும் (IATO) இலங்கை மாநாட்டுப் பணியகமும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு, இலங்கையின் கொழும்பு நகரத்தில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

IATO என்பது நாட்டில் 1600 எண்ணிக்கைக்கும் அதிகமான உறுப்புரிமை பெற்றுள்ள பிரயாண இயக்குநர்கள் தரப்புகளின் தேசிய உயர் பீடமாகும். சுற்றுலா மற்றும் உபசரிக்கும் தொழிலில் ஈடுபடுகின்ற தேசிய உள்நாட்டு பிரயாண இயக்குநர் தரப்புகள், பிரயாண முகவர்கள், சுற்றுலா ஹோட்டல்கள் விடுதிகள், எயார்லைன்ஸ் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகள் ஆகிய தரப்புகள் இந்த IATO உறுப்புரிமையை பெற்றுள்ளன. IATO தரப்புகள் அவற்றின் பிரதான செயற்பாட்டுப் பிரிவுகளில் வெளிநாட்டு சுற்றுலா உற்பத்திகளை சேர்த்ததன் மூலமாக உள்நாட்டு சுற்றுலாவை தாண்டி, சுற்றுலா சார்ந்த செயற்பாடுகளின் நோக்கெல்லையை விஸ்தரித்துள்ளன. ஒரு விஷேட 'வெளிநாட்டு சுற்றுலா சபையும் தாபிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில், முதலாவது 'வெளிநாட்டு சுற்றுலா மாநாட்டை' இலங்கையின் கொழும்பு நகரத்தில் ஏற்பாடு செய்வதற்கு IATO மூலம் தீர்மானிக்கப்பட்டது. இந்தியாவின் பிரயாண மற்றும் சுற்றுலா பிரிவுகளை பிரதிநிதிப்படுத்தி 160 எண்ணிக்கைக்கும் அதிகமான பிரதிநிதிகள் இந்த மூன்றுநாள் சுற்றுலா மாநாட்டில் கலந்துகொண்டனர்.

IATO உறுப்பினர்கள் இலங்கையில் அனுபவத்தை பெறக்கூடிய வகையில் அவர்களுக்கு உதவுதல் மற்றும் ஆய்வு சுற்றுலாக்களை மேற்கொள்ள எதிர்பார்க்கின்ற இந்தியர்களுக்கு எழுகின்ற வெளிநாட்டு சுற்றுலா சந்தை அபிலாஷைகளை பூர்த்திசெய்தல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் இந்த சுற்றுலா மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலக நாடுகள் புதிய வளர்ச்சி வாய்ப்புகளை தேடுவதால், உலகத்தின் பாரிய நுகர்வு சுற்றுலா சந்தைகளிலிருந்து, நாட்டின் பிரத்தியேக தனித்துவமான கலாசாரம், சுற்றுலா மரபுரிமை, சமையல்கலை, பொருட்கள் வாங்கல், மலர்கள் வாங்கல் முதலியன போன்ற அரிதான வாய்ப்புகளை வழங்குவதற்கு இலங்கை எவ்வாறு அர்ப்பணிப்புடன் தயாராகவுள்ளது என்பதை அறிந்துகொள்ள இந்த சுற்றுலா மாநாடு உதவியது.

இந்த சுற்றுலா மாநாடு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்களினாலும் மற்றும் விஷேட சாட்டுதல் பணிகள் அமைச்சர் கௌரவ சரத் அமுனுகம அவர்களினாலும் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'இந்தியாவின் வெளிநாட்டு சுற்றுலா துறை' 20% வீத துரித வளர்ச்சியை அடைந்து வருகின்றது மற்றும் 2020 ஆம் ஆண்டளவில் 50 மில்லியன் என்ற சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையை அடையும் என இந்த மாநாட்டின் போது எதிர்பார்க்கப்பட்டது.

இ.மா.ப. இலங்கை ஒரு சர்வதேச சுற்றுலா ஸ்தலமாகவும் மற்றும் அதனூடாக ஆஜஊநு சுற்றுலா ஸ்தலமாகவும் சாத்தியமான ரீதியில் வளர்ச்சியடைந்து வருவது பற்றி IATO பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்தது.




IATO MEMBER- YOUR RELIABLE PARTNER
IATO
INDIAN ASSOCIATION OF TOUR OPERATORS













# அறிமுகம்

MICE சுற்றுலா என்பது இலங்கையில் புதிய ஒரு சுற்றுலா தொழிலல்ல. இந்த சுற்றுலா 70 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் தொட்டு இருந்து வருகின்றது. நாட்டிற்கு 80 எண்ணிக்கைக்கும் அதிகமான உலக தலைவர்களை வரவழைத்த அணிசேரா நாடுகளின் சுற்றுலா மாநாட்டை இலங்கை ஆதரித்து உபசரித்தது. அதே போன்று, இலங்கை தொழில் ரீதியாக கூட்டங்களை கையாளுவதற்கான மிகச்சிறந்த இடமாகவும் விளங்குகின்றது.

அரசாங்கத்தின் கரமாக MICE சுற்றுலா அபிவிருத்திற்கும் மற்றும் ஊக்குவிப்புக்கும் என தாபிக்கப்பட்டிருக்கின்ற இ.மா.ப. உலகலாவிய ரீதியில் இலங்கையின் MICE சுற்றுலா தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகிய நிரலில் தனது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றி, 2017 ஆம் ஆண்டை நிறுவன சார் பெறுபேறுகள் ரீதியில் மற்றுமொரு சாதகமான ஆண்டாக பதிவுசெய்துள்ளது.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்பணிக்கு அமைய, இ.மா.ப. இலங்கையை MICE சுற்றுலா செயற்பாடுகளுக்கு கவர்ச்சியான விருப்பமான ஒரு ஸ்தலமாக சர்வதேச ரீதியில் நிலைபெறச்செய்து, தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு சாதாகமான ஒரு பங்களிப்பை நல்கச்செய்யும் பொருட்டு MICE சுற்றுலாவிலிருந்து உச்ச வருமானத்தை பெற்று, இலங்கையில் 'MICE சுற்றுலா தொழிலில்' நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுகின்ற சுற்றுலாத் தரப்புகளின் வாழ்க்கைத் தரங்களை அதனூடாக உயர்வடையச்செய்வதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது.

இ.மா.ப. சர்வதேச கூட்டங்கள், மாநாடுகள், வர்த்தக கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு இலங்கையின் பூகோள ரீதியான தேவையையும் மற்றும் நிலையையும் வலுப்படுத்த எதிர்பார்க்கின்றது. இந்தப் பணியகம் கேள்வி நடைமுறைகளுக்கு வழிவகுக்கின்ற, உதவுகின்ற, அரசாங்கத்தையும் மட்டும் சுற்றுலா தொழில் கூட்டொத்துழைப்புகளையும் ஊக்குவிக்கின்ற சாத்தியமான வர்த்தக நிகழ்ச்சிகளை இனங்கண்டு, உள்நாட்டு சுற்றுலா உற்பத்திகள் மற்றும் சுற்றுலா சேவைகள் தொடர்பான ஆலோசனை அடங்கலாக நிகழ்ச்சிகளுக்கான உதவியையும் மற்றும் சுற்றுலா சந்தைப்படுத்தல் சேவைகளையும் வழங்குகின்றது.

குறித்த மீளாய்வு ஆண்டானது செயற்பாடுகளின் சாத்தியமான ஒரு வழிகாட்டலுக்கு சான்றாக அமைந்துள்ளது.

மாநாட்டுப் பிரிவில், அண்ணளவாக 215 சர்வதேச மாநாடுகள் (2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 119 மாநாடுகளுடன் ஒப்பிடும் போது) நடத்தப்பட்டுள்ளன. IATO (இந்திய பிரயாண இயக்குநர் தரப்புகளின் அமைப்பு) 2017 வெளிநாட்டு சுற்றுலா மாநாடு, 2017 PATA இளைஞர் மாநாடு, 2-வது சர்வதேச அலங்கார மீன்கள் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப மாநாடு, சார்க் பிராந்திய அழகியலாளர்கள் சங்கத்தின் 12-வது கூட்டம், மாணவர்களின் தர வட்டங்கள் பற்றிய 20-வது சர்வதேச மாநாடு, பணச்சலவை பற்றிய ஆசிய பசுபிக் குழுவின் 20-வது வருடாந்த கூட்டம், ஆசிய பிராந்திய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்களின் 28-வது மாநாடு, ஆசிய பசுபிக் பிராந்திய தொடர்பாடல் கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை அமைப்பின் 17-வது மாநாடு, SACOSAN தொடர்பான 10-வது உள்ளக நாட்டு தொழிற்படு குழுக் கூட்டம், சார்க் சர்வதேச மாநாடு, ஆசிய பசுபிக் வனங்கள் பாதுகாப்பு ஆணைக்குழுவின் 27-வது கூட்ட அமர்வு, ஆசிய பிராந்திய கடன் ஒன்றியத்தின் 27-வது மாநாடு, மற்றும் ஐரோப்பிய திரை அச்சீட்டாளர்கள் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் என்பன இலங்கையில் நடத்தப்பட்ட பெரும் மாநாடுகளில் ஒருசில மாநாடுகளாகும்.

கண்காட்சித் துறையும் நன்கு செயலாற்றியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 83 பெரும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாண எடெக்ஸ் சர்வதேச வர்த்தக சந்தை, பூகோள லிப்கட் மின்தூக்கி எக்ஸ்போ, 8-வது ஸ்ரீ லங்கா டெக்ஸ்ட்டெக், 2017 சர்வதேச எக்ஸ்போ, 2017 சைனா க்குவாங்க்ஸி உற்பத்திகள் கண்காட்சி, சர்வதேச மருத்துவ எக்ஸ்போ, 'பெகசெட்ஸ்' சர்வதேச இரத்தினக்கல் ஆபரண கண்காட்சி, 2017 லங்காபெக், மற்றும் இன்டெக்ஸ் தெற்காசிய கண்காட்சி என்பன இலங்கையில் நடத்தப்பட்ட பெரும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

சுற்றுலாவை கையாளுவதற்கான தொழில் ரீதியில் தகுதி வாய்ந்த ஒரு ஸ்தலமாக இலங்கையை விளங்கச்செய்யும் கண்ணோட்டத்தில், பணியகம் 2017 ஆம் ஆண்டிலும் நாடளாவிய ரீதியில் பிராந்திய தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியது.

# பொதுவான செயற்பாடுகள்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பிரதான செயற்பாடுகள் இலங்கையை MICE சுற்றுலாவுக்கான (கூட்டங்கள், ஊக்குவிப்பு பிரயாணங்கள், மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்) ஒரு ஸ்தலமாக விளம்பரப்படுத்தும் செயற்பாடுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளன. MICE என்பது ஒரு ஓய்வு சுற்றுலா சந்தையாகும். அத்தகைய ஓய்வு சுற்றுலா ஊக்குவிப்புகளுக்கு வித்தியாசமான ஊக்குவிப்பு திறமுறைத்திட்டங்கள் இருக்கின்றன. பணியகத்தினால் நிறைவேற்றப்பட்ட பணியை சுற்றுலா சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களின் அடிப்படையில் நான்கு திறமுறைத்திட்டங்களின் கீழ் வகைப்படுத்த முடியும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பயிற்சி, மற்றும் சுற்றுலா சந்தைப்படுத்தல் என்பன இந்த திறமுறைத்திட்டங்களாகும். பொதுவான செயற்பாடுகள் என முன்பு குறிப்பீடு செய்யப்பட்ட ஆலோசனை வழங்கல், ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டொத்துழைப்பு என்பவற்றில், சுற்றுலா தொழிலில் இ.மா.ப. கொண்டுள்ள பொறுப்புப்பணி நான்காவது திறமுறைத்திட்டத்தில் அடங்குகின்றது.

உள்நாட்டு சங்கங்கள், அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றுக்கு உதவுதல், மற்றும் சுற்றுலா கேள்வி, ஆலோசனை வழங்கல், திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்துதல் அதே போன்று இலங்கையை MICE சுற்றுலா நிகழ்ச்சிகளுக்கான ஒரு ஸ்தலமாக விளம்பரப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஒரேயொரு துணை நிறுவனம் என்ற ரீதியில் மாநாடுகளுக்கும் மற்றும் கண்காட்சிகளுக்கும் பெறுமதி சேர்த்தல் போன்ற விஷேட தொழிற்பாடுகளும் மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இ.மா.ப. பொறுப்புப்பணியில் உள்ளடங்குகின்றன.

கீழே தரப்பட்டுள்ளவை (ஆலோசனை வழங்கல், கூட்டொத்துழைப்பு, ஒருங்கிணைத்தல்) சில பொதுவான செயற்பாடுகளாகும். மேற்குறித்தவற்றின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டங்களில் இ.மா.ப. சம்பந்தப்பட்டுள்ளது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில நிகழ்ச்சித்திட்டங்களில் இத்தகையவையும் உள்ளடங்குகின்றன.

- IATO மாநாடு - இந்திய பிரயாண இயக்குநர் அமைப்பின் (IATO) மாநாடு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை இலங்கை மாநாட்டுப் பணியகத்தால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. IATO என்பது நாட்டில் 1600 எண்ணிக்கைக்கும் அதிகமான உறுப்புரிமை பெற்றுள்ள பிரயாண இயக்குநர்கள் தரப்புகளின் தேசிய உயர் பீடமாகும். நிகழ்ச்சிகளை ஏற்று நடத்தியமை தவிர, இ.மா.ப. இலங்கை ஒரு சர்வதேச சுற்றுலா ஸ்தலமாகவும் மற்றும் அதனூடாக MICE சுற்றுலா ஸ்தலமாகவும் சாத்தியமான ரீதியில் வளர்ச்சியடைந்து வருவது பற்றி IATO பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்ததுடன், IATO பிரதிநிதிகளுடன் பரஸ்பர ரீதியில் கலந்துரையாடும் வகையில் உள்நாட்டு சுற்றுலா தொழில் அங்கத்தவர்களின் நிமித்தம் B2B எனும் பிரிவு வசதியையும் ஏற்பாடு செய்து வழங்கியது.

- யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை (JITF 2017)

  JITF 2017 வர்த்தக சந்தை யாழ்ப்பாண மாநகர சபை, இலங்கை மாநாட்டுப் பணியகம் மற்றும் சர்வதேச வர்த்தக மன்றம் என்பவற்றின் ஆதரவுடன் யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் கூடகத்துடன் இணைந்து இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் லிமிற்றட் (LECS) நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்ஸியுலர் ஜெனரால் மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் கூடகத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இ.மா.ப. முகாமையாளர் இதற்கான VIP நபராக அழைக்கப்பட்டிருந்தார். கண்காட்சிக்கு இணையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தக ஒன்றியத்திற்கு இவர் தனது பங்களிப்பை நல்கினார்.

- 2017 PATA இளைஞர் மாநாடு

  இந்த PATA இளைஞர் மாநாடு கொழும்பு சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) 2017 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நடத்தப்பட்டது. பிரயாண மற்றும் சுற்றுலா ஆகியவற்றின் எதிர்காலம் தொடர்பில் மறு பரம்பரையினருக்குள்ள பொறுப்புப்பணி பற்றி கலந்துரையாடும் பொருட்டு இலங்கை, அவுஸ்திரேலியா மற்றும் மகாஓ SAR ஆகியவற்றின் பல நிறுவனங்களினதும் 130 எண்ணிக்கைக்கும் அதிகமான மாணவர்களும், பட்டதாரி மாணவர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் என பலரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

  PATA வருடாந்த உச்சிமாநாட்டின் முதலாவது நாள் இலங்கை மாநாட்டுப் பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, SLITHM மூலம் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு 'தடைகளின்றிய: நூற்றாண்டுகள் மற்றும் சுற்றுலாவின் எதிர்காலம்' என்ற கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

  சிங்கபூர் ACI HR சொலூஷன்ஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரும், பிரதான நிறைவேற்று அலுவலருமான (பி.நி.அ.) திரு அன்ட்ரு சான் என்பவர் 'ஜென் வூ என்ட் மிலெனியல்ஸ்ஸ/க்கான எதிர்காலம் - சுற்றுலா தொழிலிலுள்ள திறமையும் மற்றும் ஆட்சேர்ப்பும்' என்ற தலைப்பில் தனது ஆரம்ப உரையை நிகழ்த்தினார். கலிபோனியா பல்கலைக்கழகத்தின் பூகோள மற்றும் சமூக ஆய்வுகள் பீடத்தினது பீடாதிபதியும் மற்றும் PATA மனித மூலதன அபிவிருத்தி குழுவின் (HCD) தலைவருமான கலாநிதி க்ரிஸ் பொடிட்ரில் என்பவரின் வழிகாட்டலில் குறித்த நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு நடத்தப்பட்டது.



அந்தந்த நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோள்களின் அடிப்படையில் இலங்கையில் நடத்தப்பட்ட/நடத்தப்படவுள்ள பின்வரும் நிகழ்ச்சிகளுக்கான கேள்வியில், இ.மா.ப. குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில், தனது தொழில்நுட்ப நிபுணர்களை கிடைக்கச்செய்து, கீழ்காணும் நிகழ்ச்சிகளுக்கு உதவியது.

| திகதியும் மாதமும் | உள்நாட்டு நிகழ்ச்சி ஒழுங்கமைக்கும் தரப்பு | நிகழ்ச்சி |
|---|---|---|
| 2017 சனவரி 27-29 | LECS | யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை - (JITF 2017) |
| 2017 சனவரி 26-27 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | உயர் சந்தைப்படுத்தல் பற்றிய சர்வதேச மாநாடு (ICAM) |
| 2017 சனவரி 28 - மார்ச் 15 | சினெமென்ட் ஹோட்டல் என்ட் ரெஷோர்ட்ஸ் | இந்திய MICE க்ஷுரூப் |
| 2017 பெப்ருவரி 24-26 | இலங்கை அழகியலாளர்கள் இன்டென்ஸிவிஸ்ட் கல்லூரி | 12 SAARC AA மாநாடு மற்றும் ஞ 23-வது வருடாந்த கல்வி மாநாடு - 2017 |
| 2017 பெப்ருவரி 23-24 | இலங்கை இரத்த நிபுணர்கள் கல்லூரி | இலங்கை இரத்த நிபுணர்கள் கல்லூரியின் சர்வதேச மாநாடு |
| 2017 பெப்ருவரி 7 | LECS | புரோ உணவு மற்றும் புரோ பொதி - AGBZZ 2017 கண்காட்சியும் விளம்பரமும் |
| 2017 பெப்ருவரி 9-11 | ஜெட் விங் ட்ரவெல்ஸ் | இந்திய MICE க்ஷுரூப் - ABB க்ஷுரூப் |
| 2017 பெப்ருவரி 16-17 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச மாநாடு - 2017 |
| 2017 பெப்ருவரி 17-21 | பூகோள கல்வி ஆராய்ச்சி நிறுவகம் | பாராகிளைடிங் சேண 1-வது சர்வதேச விழா - 2017 |
| 2017 மார்ச் 09-10 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | உயிரியல் விஞ்ஞானம் பற்றிய 2-வது சர்வதேச மாநாடு - 2017 |
| 2017 மார்ச் 24-25 | GARI | புடவை கைத்தொழில்கள் மற்றும் /பேஷன் வடிவமைப்பு பற்றிய 2-வ துசர்வதேச மாநாடு |
| 2017 மார்ச் 09-10 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | உயிரியல் விஞ்ஞானமும் உயிரியல் தொழில்நுட்பமும் பற்றிய 2-வது சர்வதேச மாநாடு |
| 2017 ஏப்ரல் 28 | GARI | கல்வி மற்றும் தொலைக் கற்கை பற்றிய 3-வது சர்வதேச மாநாடு - 2017 |
| 2017 ஏப்ரல் 02 - 05 | ரோயல் ஹொலிடேய் | இந்திய MICE க்ஷுரூப் - இந்திய ஜெனெரல் மோட்டர்ஸ் |
| 2017 ஏப்ரல் 26 - மே 1 | ஏசியன் அட்வென்செர் | இந்திய MICE க்ஷுரூப் - சாகர் சீமெந்து லிமிற்றட் |
| 2017 ஏப்ரல் 06-08 | பேராதெனிய பல்கலைக்கழக விவசாய பீடம் | அறுவடைக்குப் பிற்பட்ட காலமும் மற்றும் தர முகாமைத்துவமும் பற்றிய IV-வது சர்வதேச மாநாடு |
| 2017 ஏப்ரல் 07-12 | இவென்ட் ஹொரைஷென் | UAE MICE க்ஷுரூப் - பிலிப்ஸ் பேர்ஷெனெல் ஹெல்த் |





| திகதியும் மாதமும் | உள்நாட்டு நிகழ்ச்சி ஒழுங்கமைக்கும் தரப்பு | நிகழ்ச்சி |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 18 | கொனய்ஸ்ஸென்ஸ் டி சிலோன் | இலங்கையின் சவால் - 2017 |
| 2017 ஏப்ரல் 27-30 | இலங்கை உளவியல் நிபுணர்கள் கல்லூரி | இலங்கை உளவியல் நிபுணர்கள் கல்லூரியின் 14-வது வருடாந்த கல்வி அமர்வுகள் - 2017 |
| 2017 ஏப்ரல் 05-08 | லுக்ஸி ஏசியா | இந்திய MICE க்ஷரூப் - TATA ஸ்டீல் |
| 2017 மே 04-06 | இலங்கை தோல் மருத்துவ நிபுணர்கள் கல்லூரி | இலங்கை தோல் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் 25-வது வருடாந்த கல்வி அமர்வுகள் |
| 2017 மே 04 - 06 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | பெண்கள் கற்கைகள் பற்றிய 3-வது மாநாடு - 2017 |
| 2017 மே 18 - 21 | இ.மா.ப., SLTPB | PATA |
| 2017 மே 25- 28 | LECS | இந்திய கைப்பணிகள் கண்காட்சி - சில்ப கலா - 2017 |
| 2017 மே 29 ஜு/ன் 02 | ஆப்பிள் ஹொலிடேய் | MICE க்ஷரூப் - டெல் ஹொாங் கொங் லிமிற்றட் |
| 2017 மே 15- 17 | ஶ்ரீ லங்கா எயார்லைன்ஸ் | ICCA காங்கிரஸ் - 2017 |
| 2017 யுன் 7 | NKAR | இந்திய மைஸ் க்ஷரூப் - வரி தொழில்நடத்துநர்களின் அகில இந்திய ஒன்றியம் |
| 2017 யுன் 15 - 17 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | பொருளாதாரமும் அபிவிருத்தியும் பற்றிய சர்வதேச மாநாடு - 2017 |
| 2017 யுன் 30 - யுலை 02 | இலங்கை கட்டிடவிலயலாளர்கள் நிறுவகம் | 6-வது உலக நிர்மாண மாநாடு |
| 2017 யுன் 30 - யுலை 02 | இலங்கை ஹோட்டல் பாடசாலை பட்டதாரி மாணவர் சங்கம் | ஹோட்டல் கண்காட்சி - 2017 |
| 2017 யுலை 11 - 13 | ரஜரட்டை பல்கலைக்கழகம் | சுற்றுலா தொழிலிலுள்ள தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகள் பற்றிய வேலையரங்கு |
| 2017 யுலை 13 - 16 | SLMA | SLMA சங்கத்தின் 130-வது நிறைவு ஆண்டு சர்வதேச மருத்துவ மாநாடு |
| 2017 யுலை 18 - 20 | கொக்ஸ் என்ட் கிங்ஸ் | MICE க்ஷரூப் இந்தியா கொக்ஸ் என்ட் கிங்ஸ் |
| 2017 யுலை 25 - 28 | ஆப்பிள் ஹெலிடேய் | அக்பர் ஹொலிடேய்ஸ் க்ஷரூப்ஸ் - 1 |
| 2017 யுலை 18 - 20 | KAIROS | டெஸ்ட்டினேஷன் வெடிங் (இந்தியா) |
| 2017 ஆகஸ்ட் 02 - 05 | சிலோன் ஷரூட்ஸ் | அக்பர் ஹொலிடேய்ஸ் க்ஷரூப்ஸ் - 2 |
| 2017 ஆகஸ்ட் 16 - 20 | இலங்கை சத்திரசிசிக்சை நிபுணர்கள் கல்லூரி | கூட்டு சர்வதேச மாநாடு (சத்திரசிகிச்சை) |
| 2017 ஆகஸ்ட் 16 - 19 | ஆப்பிள் ஹெலிடேய் | அக்பர் ஹொலிடேய்ஸ் க்ஷரூப்ஸ் |



| திகதியும் மாதமும் | உள்நாட்டு நிகழ்ச்சி ஒழுங்கமைக்கும் தரப்பு | நிகழ்ச்சி |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 24 - 25 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | ICOAF - ICFA 2017 |
| 2017 ஆகஸ்ட் 04 - 06 | LECS | புரோ உணவு / புரோ பொதி மற்றும் AGBIZ எக்ஸ்போ - 2017 |
| 2017 ஆகஸ்ட் 25 | GARI | GARI வசந்த கால ஆராய்ச்சி மாநாடு - 2017 |
| 2017 ஆகஸ்ட் 18 | வில்லியம் அங்கிலிஸ் நிறுவகம் | பரஸ்தான் |
| 2017 ஆகஸ்ட் 25 | GARI | SRS, ICSD, ICPCM |
| 2017 ஆகஸ்ட் 25 - 27 | கொழும்பு ஆராய்ச்சி மற்றும் உளவியல் நிறுவகம் | ICAP 2017 |
| 2017 ஆகஸ்ட் 03-06 | இலங்கை மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் கல்லூரி | பொன் விழா விஞ்ஞான மாநாடு - 2017 |
| 2017 ஆகஸ்ட் 03-05 | எய்ட்கென் ஸ்பென்ஸ் கொன்பெகரென்ஸ் | 1-வது IPCRG பிராந்திய விஞ்ஞான மாநாடு - 2016 |
| 2017 ஆகஸ்ட் 10-22 | இலங்கை சட்டத்தரனிகள் க்ரிகெட் குழு | 6-வது சட்டத்தரனிகள் க்ரிகெட்டு உலக கிண்ணம் |
| 2017 செப்டம்பர் 12 | இலங்கை கணனிகள் சங்கம் | IFIP வருடாந்த பொது பேரவைக் கூட்டங்கள் |
| 2017 செப்டம்பர் 08 - 17 | கொனய்ஸ்ஸென்ஸ் டி சிலோன் | '2-வது லெக் லங்கா சலென்ஜ்' - 2017 |
| 2017 செப்டம்பர் 06 - 09 | SAARC CCI, FCCISL | SAARC முதலீட்டு சங்கம் மற்றும் வர்த்தக சந்தை |
| 2017 செப்டம்பர் 27 - 29 | இலங்கை தொழில்தேர்ச்சியாளர் சங்க அமைப்பு | 30-வது OPA வருடாந்த மாநாடு |
| 2017 செப்டம்பர் 7 | கணனிப் பாடசாலை - கொழும்பு பல்கலைக்கழகம் | ICTer - 2017 |
| 2017 செப்டம்பர் 7 - 10 | பன் ஹொலிடேய்ஸ் | ரெலிகெயார் சுகாதார காப்புறுதி |
| 2017 செப்டம்பர் 21 - 22 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | ICOAH - ICOSS |
| 2017 ஒற்றோபர் 10-12 | இலங்கை சுகாதார தகவல் தொடர்பு சங்கம் | 02-வது பொதுநலவாய டிஜிட்டெல் சுகாதார மாநாடு |
| 2017 ஒற்றோபர் 27 - 29 | SAARCLAW ஸ்ரீ லங்கா சப்டெர் | SAARCLAW சட்டத்தரனிகள் சங்கத்தின் 14-வது மாநாடு மற்றும் பிரதம நீதியரசர் சங்கத்தின் 11-வது மாநாடு |
| 2017 ஒற்றோபர் 09 -15 | சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு | WACEM - 2017 |
| 2017 ஒற்றோபர் 4 | கொழும்பு பல்கலைக்கழகம் | சுற்றுலா தலைவர்களின் உச்சிமாநாடும் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடும் - 2017 |
| 2017 ஒற்றோபர் 26 | இலங்கை பொதியிடல் பற்றிய கல்வி நிறுவம் | லங்காபாக் வருடாந்த காங்கிரஸ் மாநாடு / கண்காட்சி - 2017 |





| திகதியும் மாதமும் | உள்நாட்டு நிகழ்ச்சி ஒழுங்கமைக்கும் தரப்பு | நிகழ்ச்சி |
|---|---|---|
| 2017 ஒற்றோபர் 26 - நவம்பர் 1 | சியோஎரா கெப்பிற்றல் | சீன தொழில்முயற்சியாளர்களின் பிரதிநிதிகளுடனான முதலீடு தொடர்பான கூட்டம் |
| 2017 ஒற்றோபர் 13 - 15 | வோல்கெர்ஸ் ட்டுவெர்ஸ் | MICE குழு - EDAC எடியுகேஷனெல் க்ஷரூப் |
| 2017 ஒற்றோபர் 14 | இலங்கை பொது மருத்துவர்கள் கல்லூரி | இலங்கை பொது மருத்துவர்கள் கல்லூரியின் 43-வது ஆண்டு கல்வி அமர்வுகள் |
| 2017 நவம்பர் 19 - 21 | பாலியல் மருத்துவத்திற்கான இலங்கை சங்கம் | பாலியல் மருத்துவம் பற்றிய 3-வது தெற்காசிய மாநாடு |
| 2017 நவம்பர் 10- 11 | மருத்துவ கல்வியியலாளர்கள் கல்லூரி | மருத்துவ கல்வி பற்றிய கொழும்பு மாநாடு - 2017 |
| 2017 நவம்பர் 15-17 | வேல்டெக்ஸ் இந்தியா எக்ஸ்ஹிபிஷன் என்ட் ப்ரமோஷன் (ப்ரைவட்) லிமிற்றட் | இன்டெக்ஸ் தெற்காசியா - 2017 |
| 2017 நவம்பர் 16 -17 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | 2-வது உலக ஊனமுற்றோர் மற்றும் புனர்வாழ்வு (WDRC) மாநாடு - 2017 |
| 2017 நவம்பர் 17-19 | வோல்கெர்ஸ் ட்டுவெர்ஸ் | EDAC எடியுகேஷனெல் க்ஷரூப் வேவ் 3 |
| 2017 நவம்பர் 10 | கொழும்பு விருந்துபசார முகாமைத்துவ கலாசாலை | மர்ட்டி க்ராஸ் |
| 2017 திசம்பர் 28 - 29 | இலங்கை பிரயோக புள்ளிவிபரங்கள் நிறுவகம் | சர்வதேச புள்ளிவிபரங்கள் மாநாடு - 2017 (நல்லாட்சிக்கான புள்ளிவிபரங்கள்) |
| 2017 திசம்பர் 5-6 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | பட்டினியும் நிலையான அபிவிருத்தியும் (ICPSD) பற்றிய 4-வது மாநாடு - 2017 |
| 2017 திசம்பர் 14 -15 | சர்வதேச அறிவு முகாமைத்துவ நிறுவகம் (TIIKM) | நனோ விஞ்ஞானமும் நனோ தொழில்நுட்பமும் (ICNSNT) பற்றிய 4-வது சர்வதேச மாநாடு - 2017 |
| 2017 திசம்பர் 1 -8 | இலங்கை nATANDA நடன அரங்கம் | nATFEST |
| 2017 திசம்பர் 22 | GARI | GARI வின்டெர் ஆராய்ச்சி மாநாடு - 2017 |

# ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகள்

- சாத்தியமான வெளிநாட்டு தரப்புகளுக்குரிய மாநாட்டு வசதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பயணிகளுக்கான அச்சீடு மற்றும் இணையத்தள அபிவிருத்தி ஆகியவற்றின் செலவுகளை மீளளிப்பு செய்ததன் மூலமாக ஆசிய பிராந்திய இரிடொலொஜி மாநாட்டு ஒழுங்கமைப்பு தரப்புகளுக்கு உதவியும் மற்றும் சுற்றுலா ஸ்தலத் தெரிவு, PCO தெரிவு முதலியன தொடர்பில் ஆலோசனையும் வழங்கப்பட்டமை.

- பட்டியல்படுத்தப்பட்ட இடங்களை ஒருங்கிணைத்து அத்தகைய இடங்களின் மூலமாக கேள்வி விலைகளை அனுப்பச்செய்து குழந்தைத் தொற்றுநோய்களுக்கான உலக சங்க மாநாட்டு ஒழுங்கமைக்கும் தரப்புகளுக்கு உதவி வழங்கப்பட்டமை.

- ஊட்டச்சத்து மருந்துகளின் தொழிற்பாட்டுப் பொறிமுறைகள் பற்றிய சர்வதேச மாநாட்டை ஏற்று நடத்தும் வகையில் இ.மா.ப. இலங்கை போஷாக்கு சங்கத்துடன் ஒருங்கிணைந்து தொழிற்பட்டமை.

- இ.மா.ப. ஜெஹராவொஸ் விட்னெஸ் ஸ்பெஷல் கொன்வென்ஷென் நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டமை மற்றும் உதவி / ஆலோசனை வழங்கப்பட்டமை.

- APASWE - IFSW (AP) கூட்டுப் பிராந்திய சமூகப் பணி மாநாட்டை ஏற்று நடத்தும் வகையில், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் சார்பாக, சுற்றுலாவுக்கான ஒரு கேள்வி ஆவணம் தயாரிக்கப்பட்டமை.

- எதிர்கால நன்மையின் நிமித்தம் தனது உறவை பலப்படுத்தும் நோக்கில் சர்வதேச கூட்டங்கள் மற்றும் மாநாட்டு சங்கத்தின் (ICCA) தனக்கான உறுப்புரிமை பணியகத்தினால் மீளப்புதுப்பிக்கப்பட்டமை. தற்பொழுது ICCA சங்கத்தின் உறுப்புரிமை இ.மா.ப. இன் ஊடாக மாத்திரம் பேணப்பட்டு வருகின்றமை.

- நாட்டில் இடம்பெறுகின்ற MICE சுற்றுலா செயற்பாடுகளின் நாளாந்த ஆராய்ச்சி ஊடகப் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்டமை மற்றும் இலங்கையின் MICE சுற்றுலா நிகழ்ச்சிகள் கால அட்டவணை, சேகரிக்கப்பட்ட சுற்றுலா தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டமை. ICCA பூகோள சுற்றுலா ஸ்தலங்களை தரப்படுத்துவதன் அடிப்படையில், இலங்கையின் அதிகரித்த பிரதிபலிப்பின் நிமித்தம் அத்தகைய கால அட்டவணை ICCA விவாதத்திற்காக அனுப்பப்பட்டமை.

- MICE வாடிக்கையாளர் தரவுத்தளத்தின் மென்பாக அபிவிருத்தி பாகம் நிறைவு செய்யப்பட்டமை மற்றும் ஒரு வருட காலத்திற்கு அதனை ஏற்று நிறைவேற்றும் நிமித்தம் ஒரு விநியோகத் தரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டமை. தரவுத்தளத்தில் உள்ளீர்க்கப்பட வேண்டிய MICE தொடர்பு விடயங்கள் வருடம் முழுதிலும் ஸ்ப்ரெட் அட்டைகளில் உள்ளீர்க்கப்பட்டமை.

- MICE தொழில் சார்ந்த சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கற்கும் 34 மாணவர்களின் பங்குபற்றலில் 11-வது தடவையாக நீர்கொழும்பு ஜெட்வின் ப்ளூ ஹொட்டலில் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடத்தப்பட்டமை. பூகோள MICE சுற்றுலா தொழிலில் தலைமை வகிக்கின்ற சீனாவின் திருமதி யாஓ ஹோங், இந்தியாவின் திரு ப்ரசான்ட் சஹா. மலேசியாவின் வில்லியம் டெஓ ஆகியோர்கள் பங்குபற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். திருமதி பட்டி பாவுல் மற்றும் திரு நில்மின் நாணயக்கார அகியோர் உள்நாட்டு பயிற்றுவிப்பாளர்களாக இணைந்தனர்.



பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்ட கற்கும் மாணவர்களும் பயிற்றுவிப்பாளர்களும்

# சுற்றுலா சந்தைப்படுத்தல் செயற்பாடுகள்

இ.மா.ப. உள்நாட்டு கைத்தொழில் தரப்புகளுடன் இணைந்து பின்வரும் MICE வர்த்தக சந்தைகளில் பங்குபற்றி, சாத்தியமான சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் இலங்கை சுற்றுலா உற்பத்திகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

- 2017 பெப்ருவரி 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை அபூதாபியில் நடத்தப்பட்ட அராபிய IBTM

அராபிய IBTM என்பது மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் மற்றும் முக்கியமான சர்வதேச சுற்றுலா சந்தைகளிலிருந்தும் வருகின்ற முகவர்கள், கூட்டுத்தாபன மற்றும் சங்க சுற்றுலா வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு சுற்றுலா ஸ்தலங்களை தொடர்புபடுத்தும் மத்திய கிழக்கு நாடுகளின் முதன்மை வாய்ந்த MICE சுற்றுலா எக்ஸ்போவாகும். குறித்த நிகழ்ச்சி முன்கூட்டி ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாட்களுக்கு அதிக கூட்டங்களிலும் மற்றும் வலையமைப்புகளிலும் உபசார சுற்றுலா வாடிக்கையாளர்களுடன் அதிகளவு தனிப்பட்ட பரஸ்பரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்த 1-1 மூடிய அமைப்பில் இடம்பெற்றது. இலங்கையின் MICE சுற்றுலா தொழிலுடன் ஐ.அ.இ. சுற்றுலா ஊக்குவிப்பு, கூட்டுத்தாபனங்கள் என்பவற்றையும், இடம்பெயர்வோரையும் மற்றும் கூட்டங்கள் சந்தையையும் இணைக்க உதவுவது பணியகத்தின் குறிக்கோளாக விளங்கியது.




பொது முகாமையாளர் மற்றும் முகாமையாளர் - சுற்றுலா வாடிக்கையாளர் ஒருவருடனான சுற்றுலா சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புகள் பற்றிய கலந்துரையாடல்.

கீழ்காணும் பிரமுகர்களுடன் பயனுள்ள கூட்டங்களும் தனித்தனியாக நடத்தப்பட்டன.

திரு முபாரக் ஹமாத் அல் சாம்ஸ்ல், பணிப்பாளர், அபூதாபி மாநாட்டுப் பணியகம்

திருமதி சாரா அப்துல்லா அல் அஸ்லால், பிரிவுத் தலைவர், டுபாய் மாநாட்டு மற்றும் கண்காட்சி அமைப்பு

- ஜேர்மனியின் ப்ரான்க்பேகர்ட் எனும் இடத்தில் 2017 மே மாதம் 16 ஆம் திகதி முதல் 2017 மே 18 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட IMEX (ஊக்குவிப்பு சுற்றுலாவுக்கான உலகலாவிய கண்காட்சி)




சுற்றுலா சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு முகாமையாளர் சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு இலங்கை பற்றிய ஒரு விளக்கத்தை வழங்குகின்றார்.

ஜேர்மனி அதிகளவு வருமானத்தை ஈட்டித்தரும் கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கிய கணிசமான வெளிநாட்டு ஊக்குவிப்பு சுற்றுலா பயணங்களை உருவாக்கி தருகின்றது. இ.மா.ப. நாட்டின் புதிய சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அதிக சுற்றுலா பயணிகளையும் மற்றும் இலங்கையில் அதிக முதலீடுகளையும் உருவாக்கும் நிமித்தம் ஜேர்மனியில் இந்த சுற்றுலா பிரிவையும் அதே நேரம் முதன்மை வகிக்கும் ஐரோப்பிய சுற்றுலா சந்தைகளையும் தக்கவைத்துக்கொள்ளும் பொருட்டு இந்த IMEX இல் பங்குபற்றியது. இ.மா.ப. அண்ணளவாக 30 தனிப்பாட்ட சந்திப்புகளையும், ஜேர்மனியில் 5 குழு சந்திப்புகளையும் நடத்தியது. இது 11 உபசார சுற்றுலா வாடிக்கையாளர்களையும், 12 உபசார ரஷ்ய சுற்றுலா வடிக்கையாளர்களையும், 2 ஐக்கிய இராச்சிய சுற்றுலா வாடிக்கையாளர்களையும், 9 ஐக்கிய அமெரிக்க சுற்றுலா வாடிக்கையாளர்களையும், 8 பிராந்திய ரஷ்ய மற்றும் கசகஸ்தான் சுற்றுலா வாடிக்கையாளர்களையும் சந்தித்தது.

- சீனாவின் பீஜிங் நகரத்தில் 2017 ஆகஸ்ட் மாதம் 23-24 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட IBTM

இ.மா.ப. முன்கூட்டி திட்டமிடப்பட்ட 40 எண்ணிக்கைக்கும் அதிகமான சந்திப்புகளில் கலந்துகொண்டமை தவிர, அந்த இரண்டு நாட்களிலும் அதிகளவான சீன வர்த்தக பிரமுகர்களுக்கு மத்தியில் ஊடக ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் அதற்கு கிடைத்திருந்தது.

இ.மா.ப. தலைவர் சீன தேசிய சுற்றுலா நிருவாகத்தினது (CNTA) அலுவலர் சிலரை சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொண்டார். இவர் CNTA இன் பணிப்பாளர் நாயகம் திரு லியு சிஜ/ன் அவர்களை சந்தித்து இரு நாடுகளுக்கு இடையிலான சுற்றுலா செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடினார். இந்த சந்தர்ப்பம் இ.மா.ப. பிரயாண சங்க கூட்டங்களுக்கு இலங்கையை ஒரு சிறந்த ஸ்தலமாக விளம்பரப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்தது. பதில் மிகவும் திருத்திகரமாகவிருந்தது.



ஆரம்ப வைபவத்தில் தலைவர்

- பிரான்ஸ் நகரத்தில் 2017 செப்டம்பர் 21 முதல் 22 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட ரெயுனிர் இன்டர்நெஷனல் (MEEDEX)



இ.மா.ப. நிலை

சுற்றுலா வாடிக்கையாளர்களை முன்கூட்டி திட்டமிட்டது போல் குறித்த நிகழ்வின் போது சந்திப்பது சாத்தியப்படாததால் அது இலங்கைக்கு வெற்றியளிக்காத ஒரு சுற்றுலா வர்த்தக சந்தையாக அமைந்தது.

- இந்தியாவின் புது தில்லியில் 2017 ஒற்றோபர் மாதம் 26 முதல் 27 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட வர்த்தக மற்றும் சுகபோக சுற்றுலா பயண மாநாடு (BLTM)

இது, இலங்கை இந்தியாவின் MICE சுற்றுலா/வியாபார பயணிகளுக்கு எதனை வழங்க முடியும் என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சிறந்த ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்தியா எமது அயல் நாடாகவிருந்தாலும், இலங்கை மாநாடுகளுக்கும் கூட்டங்கள் சார்ந்த செயற்பாடுகளுக்கும் எத்தகைய வசதிகளை வழங்க முடியும் என்பது பற்றி சுற்றுலா வாடிக்கையாளர்கள் அறிந்திருக்கவில்லை.



இலங்கை பிரதிநிதிகள்

'மிகவும் உன்ன MICE சுற்றுலா' வகுதிற்கான சிறப்பு விருது இலங்கைக்கு கிடைத்தது.




*ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் அதன் சுற்றுலா சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புகள் முகாமையாளர், மற்றும் MICE சுற்றுலா ஊக்குவிப்புகள் நிறைவேற்று அலுவலர் ஆகியோர் விருது மற்றும் சான்றிதழுடன் படத்தில் காணப்படுகின்றனர்.*



- ஸ்பெயினின் போசிலேனியா நகரத்தில் 2017 நவம்பர் 28 முதல் 30 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான உலக IBTM

இ.மா.ப. முன்கூட்டி திட்டமிடப்பட்ட 40 எண்ணிக்கைக்கும் அதிகமான சந்திப்புகளில் கலந்துகொண்டமை தவிர, அந்த மூன்று நாட்களிலும் அதிகளவான சீன வர்த்தக பிரமுகர்களுக்கு மத்தியில் ஊடக ரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பும் அதற்கு கிடைத்திருந்தது.




சுற்றுலா ஊக்குவிப்புகள் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு இலங்கை பற்றிய ஒரு விளக்கத்தை அளிக்கும் காட்சி படத்தில்

30 எண்ணிக்கைக்கும் அதிகமான உபசார சுற்றுலா வாடிக்கையாளர்கள் கலந்துகொண்ட இலங்கை சுற்றுலா ஸ்தல சமர்ப்பணத்திற்கு 9-வது தடவையாகவும் ஸ்லொட்டுக்களை பெறுவதற்கான வாய்ப்பும் இலங்கைக்கு கிடைத்திருந்தது.

இ.மா.ப. அந்த மூன்று நாட்களாகவும் IBTM உலக ஊடக நிலையத்திற்கு அனுசரணை வழங்கி சுற்றுலா வர்த்தகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதனூடாக இலங்கையை மேலும் விளம்பரப்படுத்தியது. இ.மா.ப. அந்த மூன்று நாட்களாகவும் நாளாந்த சஞ்சிகையில் சுற்றுலா வர்த்தகத்திற்கு உரிய விளம்பரத்தை செய்தது. உலக IBTM 2017 சுருக்க வழிகாட்டல் துண்டுப்பிரசுரம் மற்றும் உலக IBTM கண்காட்சி விவரப்பட்டியல் என்பன சகல சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் கண்காட்சித் தரப்புகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. 'கூட்டங்கள் சார்ந்த அதிக வியாபாரங்களை இலங்கை கவரும்' என்ற தலைப்பை உள்ளடக்கிய ஒரு கட்டுரையும் முதலாவது நாள் கண்காட்சி நாளாந்த சஞ்சிகையில் விளம்பரப்படுத்தப்பட்டது.

இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இ.மா.ப. சிங்கபூரில் 2017 ஒற்றோபர் 11 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த ஒரு MICE சுற்றுலா உக்குவிப்பு நிகழ்ச்சி

அளித்த விளக்கங்களின் போது, இந்த பணியகம் குறிப்பாக கொழும்பில் மாத்திரம் MICE சுற்றுலா செயற்பாடுகளை மேற்கொள்வதை பார்க்கிலும் பிரதானமாக ஏனைய வித்தியாசமான இடங்களிலும் அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் தேவையிலும் கவனம் செலுத்தியது. எயார்லைன்ஸ் நிறுவனம் அளித்த விளக்க உரைகள் பிரதானமாக அந்த நிறுவனத்திற்கு சிங்கபூருடன் இருக்கின்ற தொடர்பு மற்றும் அந்த நிறுவனம் MICE சுற்றுலா குழுக்களுக்கு வழங்கும் சேவைகள் பற்றிய தகவல்களை வழங்கின.




சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் தலைவர் உரையாற்றும் காட்சி



நிகழும் சுற்றுலா வாடிக்கையாளர் வர்த்தக அமர்வுகளில் தலைவர் உரையாற்றும் காட்சி

# சுற்றுலா தொழில் உறவுகள்

இ.மா.ப. சுற்றுலா தொழிலின் அபிவிருத்தியை நோக்கி கொள்கைகளிலும் மற்றும் செயற்பாடுகளிலும் இலங்கை தொழில்சார் மாநாடு, கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கும் தரப்புகளின் சங்கத்துடன் (SLAPCEO) நெருங்கி தொடர்ந்தும் பணியாற்றியது. இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், SLCPEO தலைவர் விடுத்த அழைப்பின் பேரில், இ.மா.ப. களதாரி ஹோட்டலில் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற அங்கத்தவர்கள் ஒன்றுகூடும் மற்றும் IAPCO பட்டதாரி மாணவர்கள் ஊக்குவிப்பு கூட்டத்தில் கலந்துகொண்டது.

SLAPCEO இன்று இலங்கையில் MICE சுற்றுலாவை பிரதிநிதிப்படுத்தும் ஒரேயொரு சங்கம். இதுவே இலங்கை மாநாட்டுப் பணியகம் அங்கீகரித்த ஒரேயொரு சங்கம். SLAPCEO சுற்றுலா சமூகத்தினுள் அதிகளவு தொழில்வாண்மை பேணப்படுகின்றதா என்பதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு, தனது உறுப்புரிமையை பெறுகின்ற அங்கத்துவ தரப்புகளை தேர்ந்தெடுப்பதில் கடும் நடபடிமுறையை பின்பற்றி, சுற்றுலா தொழிலின் நன்மை கருதி அதனை நிறைவேற்றுகின்றது.

இது தவிர, இ.மா.ப. MICE சுற்றுலா தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளிலுமுள்ள MICE சுற்றுலா சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

# ஏனைய செயற்பாடுகள்

### உலகலாவிய கூட்டங்கள் சுற்றுலா தொழில் தினம்

உலகலாவிய கூட்டங்கள் சுற்றுலா தொழில் தினம் உலகெங்கிலும் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந்த சர்வதேச தினத்தை முன்னிட்டு, இ.மா.ப. ஒரு அரை நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சியின் போது ஆசிய பசுபிக் சர்வதேச காங்கிரஸ் மற்றும் மாநாட்டு சங்கத்தின் பிராந்திய பணிப்பாளர் திரு நூர் அஹமட் ஹமீட் அவர்களும் மற்றும் கூட்டுத்தாபன பயிற்றுவிப்பாளரும் சேவை அனுபவ ஆலோசனையாளருமான திரு சரித்த பண்டார அவர்களும் இரண்டு விளக்க உரைகளை நிகழ்த்தினார்கள். அமைச்சின் அதிகாரிகள், சபை உறுப்பினர்கள் அடங்கலாக சுமார் 40 உள்நாட்டு MICE சுற்றுலா தொழில் தரப்புகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டன. இந்த நிகழ்வு சமுத்ரா பயிற்சி ஹோட்டலிலுள்ள மொனரா ரெஸ்ட்டுரன்டில் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை நடைபெற்றது. இந்த நிகழ்வின் நிமித்தம், ICCA ட்டுவிட்டர் ஊடாக, இ.மா.ப. விளம்பரப்படுத்தப்பட்டது.



# நிதி மற்றும் நிருவாகம்

தேவைப்பாடுகளுக்கு இணங்க, இந்த மாநாட்டுப் பணியகம் பல நிறுவனங்களினாலும் கோரப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கைகள், பொது செயலாற்றுகை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள், செயல் திட்டங்கள், செயற்பாட்டு அறிக்கைகள் அடங்கலாக சகல அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளது.

## நிறுவனக் கட்டமைப்பு

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஆளணி (பதவிகளின் எண்ணிக்கை) | நிலவும் ஆளணி (பதவிகளின் எண்ணிக்கை) | வெற்றிடம் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பொது முகாமையாளர் | 1 | 1 | - |
| சிரேஷ்ட முகாமையாளர் | 1 | 1 | - |
| முகாமையாளர் | 2 | 1 | 1 |
| உதவி முகாமையாளர் | 3 | 3 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 2 | 2 | - |
| சாரதி | 1 | 1 | - |
| அலுவலக உதவியாள் | 1 | 1 | - |
| மொத்தம் | 11 | 10 | 1 |

## இ.மா.ப. பதவியணி

| | | |
|---|---|---|
| திரு ப்ரேம குரே | - | தலைவர் |
| திரு ப்ரதீப் சிறிவர்த்தன | - | பொது முகாமையாளர் |
| அச்சினி தந்துன்கே | - | சிரேஷ்ட முகாமையாளர் |
| குமுது ஹென்னெடிகே | - | சுற்றுலா சந்தைப்படுத்தல் முகாமையாளர் |
| பியுமி பீரிஸ | - | உதவி முகாமையாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி, வணிக நியமங்கள், சங்கக் கூட்டங்கள்) |
| ரஞ்ஜிகா பெரேரா | - | உதவி முகாமையாளர் (நிதி, நிருவாகம்) |
| திரு சம்பிக்க அனுராத | - | உதவி முகாமையாளர் (சுற்றுலா சந்தைப்படுத்தல்) |
| அருந்தெத்தி குமாரி | - | முகாமைத்துவ உதவியாளர் |
| தினுஷ்கா பொன்சேக்கா | - | முகாமைத்துவ உதவியாளர் |
| திரு சன்ஜீவ பெரேரா | - | சாரதி |
| திரு ப்ரபோத விஜேசூரிய | - | அலுவலக உதவியாள் |

# நிதி நிலைக் கூற்று

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 6 | 205,977,408.98 | 122,493,225.80 |
| வருமதிகள் | 7 | 52,789,972.47 | 63,951,149.46 |
| முற்-கொடுப்பனவுகள் | 8 | 343,430.49 | 266,072.80 |
| பொருள் இருப்புக்கள் | 9 | 1,392,428.20 | 345,252.00 |
| வைப்புக்கள் | 10 | 80,000.00 | 80,000.00 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **260,583,240.14** | **186,790,448.06** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 11 | 4,225,755.24 | 5,281,840.34 |
| நீண்டகால முதலீடுகள் | 12 | 29,792,107.26 | 26,648,658.01 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **34,017,862.50** | **31,930,498.35** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **294,601,102.64** | **218,720,946.41** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்களும் அட்டுறு செலவுகளும் | 13 | 6,986,796.85 | 864,863.58 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **6,986,796.85** | **864,863.58** |
| **நீண்டகால பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | | 2,145,984.50 | 1,898,952.00 |
| **மொத்த நீண்டகால பொறுப்புக்கள்** | | **2,145,984.50** | **1,898,952.00** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **9,132,781.35** | **2,763,815.58** |
| **தேறிய சொத்துக்கள்** | | **285,468,321.29** | **215,957,130.83** |
| **தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள்** | | | |
| மூலதனப் பங்களிப்பு | | 6,433,492.69 | 6,433,492.69 |
| திரண்ட மிகை/(பற்றாக்குறை) | 14 | 279,034,828.60 | 209,523,638.20 |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள்** | | **285,468,321.29** | **215,957,130.89** |

நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களினதும், 1971 இன் 38 ஆம் நிதி அதிகார சட்டத்தினதும், 2005 இன் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா சட்டத்தினதும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதாக உதவி முகாமையாளரினால் (நிதி) சான்றுபடுத்தப்படுகின்றது.

………………………………...
ரஞ்ஜிகா பெரேரா
உதவி முகாமையாளர் (கணக்குகள்)
தயாரிக்கப்பட்டது

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பு பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் 2018.02.28 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபையினால் சான்றுபடுத்தப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டன.

……………………………
ஜே.கே. த சில்வா
தலைவர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

……………………………….
சபை உறுப்பினர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்





# வருமானக் கூற்று

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2017 உண்மையான ரூ. | 2017 வரவுசெலவுத்திட்டம் ரூ. | 2016 உண்மையான ரூ. | 2016 வரவுசெலவுத்திட்டம் ரூ. |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| பயணிகள் வருகைக் கட்டணங்கள் | | 95,153,128.48 | 110,030,000.00 | 94,217,651.02 | 93,010,000.00 |
| சுற்றுலா அபிவிருத்திக் கட்டணங்கள் | | 61,859,531.14 | 49,600,000.00 | 51,278,967.01 | 47,430,000.00 |
| ஏனைய வருமானம் | 14 | 15,596,638.60 | 9,000,000.00 | 11,128,515.95 | 8,300,000.0 |
| **மொத்த வருமானம்** | | **172,609,298.22** | **168,630,000.00** | **156,625,133.98** | **148,740,000.00** |
| **செலவுகள்** | | | | | |
| வேதனாதிகள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள் | 15 | 12,240,837.44 | 16,080,000.00 | 11,818,796.67 | 13,880,000.00 |
| பயன்படுத்தப்பட்ட நுகர்வுப்பொருட்கள், வழுங்கல்கள் | 16 | 5,296,456.92 | 6,320,000.00 | 7,009,745.86 | 5,870,000.00 |
| சுற்றுலா சந்தைப்படுத்தல் தொடர்பான செலவுகள் | 17 | 79,589,242.15 | 198,010,000.00 | 102,938,436.23 | 204,645,000.00 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 18 | 3,958,205.15 | 28,000,000.00 | 1,199,375.69 | 7,400,000.00 |
| தேய்மானம் மற்றும் கழிவு சார் செலவுகள் | 11 | 1,036,485.10 | - | 1,982,364.26 | - |
| ஏனைய செலவுகள் | 19 | 967,321.00 | 1,625,000.00 | 765,825.00 | 1,525,000.00 |
| நிதி ஆகுசெலவு | 20 | 9,560.00 | 50,000.00 | 14,725.13 | 60,000.00 |
| | | - | - | - | - |
| **மொத்தச் செலவுகள்** | | **103,098,107.76** | **250,085,000.00** | **125,729,268.84** | **233,380,000.00** |
| குறித்த ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) | | 69,511,190.46 | | 30,895,865.14 | |
| ஊ/கு மிகை/(பற்றாக்குறை) | | 249,523,638.14 | | 218,627,773.00 | |
| சுற்றுலா அபிவிருத்தி நிதி | | (40,000,000.00) | | | |
| **ஊ/கு மிகை/(பற்றாக்குறை)** | | **279,034,828.60** | | **249,523,638.14** | |



# கணக்குகளுக்குரிய குறிப்புகள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

## 1 பொதுவான தகவல்

**இலங்கை மாநாட்டுப் பணியகம் (இ.மா.ப.)**

இலங்கை மாநாட்டுப் பணியகம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. இது இலங்கையில் அமைந்துள்ளது. இநத அதிகார சபையின் பதவுசெய்யப்பட்ட தலைமை அலுவலகம் இலக்கம் 78, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரியிலுள்ள ஹோட்டல் பாடசாலைக் கட்டிடத்தின் 4-வது மாடியில் அமைந்துள்ளது.

இந்த இ.மா.ப. மாநாடுகளையும், கூட்டுத்தாபன கூட்டங்களையும், ஊக்குவிப்பு சுற்றுலா பிரயாணங்களையும் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளையும் விளம்பரப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

## 2 கணக்குகள் தயாரித்தல் அடிப்படையும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய நியமங்கள் தொடர்ச்சியாக வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. திரண்டுள்ள வருமானமும் ஆகுசெலவும் அவை சந்தப்படும் காலப்பகுதிற்கான நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டு காட்டப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கணக்குகளை பாதிக்கின்ற பணவீக்க காரணிகளுக்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

சகல சொத்துக்களும், பொறித்தொகுதிகளும், உபகரணங்களும் அவற்றின் கொள்வனவு ஆகுசெலவிலும் மற்றும் நிர்மாண ஆகுசெலவிலும் வரலாற்று அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தேய்மானத்திற்கான ஏற்பாடு உரித்துடமையின் காலப்பகுதிற்கு பொருத்தமான ஆகுசெலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேய்மான வீதங்கள் நேர் நிரல் முறையியலின் அடிப்படையில் பின்வருமாறு காணப்படும்.

| சொத்துக்கள் | வீதம் |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| வாகனங்கள் | 25% |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10% |

## 4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் திகதியிலுள்ள சகல பொருண்மையான பொறுப்புக்களும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 5 ஓய்வூதிய நன்மைகள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய ஓய்வூதிய நன்மைகளுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைமுறை மாதத்தின் அரைவாசி சம்பளத்தின் அடிப்படையில், சேவை முடிவுறுத்தல் நன்மைகள் தொடர்ச்சியான ஒவ்வொரு சேவை வருடத்திற்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. எனினும், 5 வருட சேவை நிறைவின் காரணமாக ஓய்வூதிய பொறுப்பு எழுகின்றது.

## 6 கொள்வனவு பெறுமானத்தின் அல்லது சந்தைப் பெறுமானத்தின் அடிப்படையிலான பொருட்கள் இருப்பு பெறுமானம் மிகவும் குறைவானதாகும்.





# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 6 கையிலும் வங்கியிலும் உள்ள காசு

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு - இலங்கை வங்கி | (3,228,245.92) | (91,794.29) |
| வங்கியிலுள்ள காசு - மக்கள் வங்கி | 15,726,592.71 | 4,978,114.86 |
| இ.வ. நிதி மு. A/C | 193,479,062.19 | 117,606,905.23 |
| **கையிலும் வங்கியிலும் உள்ள மொத்த காசு நிலுவை** | 205,977,408.98 | 122,493,225.80 |

இந்த கழிக்க வேண்டிய நிலுவை 2017 திசம்பர் 31 ஆம் திகதியின் இறுதி நிலுவை என்பதை தயவுசெய்து கவனிக்கவும். மேலதிகப் பற்றுக்கள் ஏதுமில்லை. ஆனால், இது இ.வ. நிதி மு. கணக்கு நடபடிமுறையின் பயனாக ஏற்படுகின்றது.

வங்கி நிதி மாற்றலை மேற்கொள்ளும் போது நாளொன்றுக்கு 2 மில்லியன் ரூபா தொகையை பேணுமாறு நாம் வங்கிக்கு ஏற்கெனவே அறிவுரை வழங்கியுள்ளோம்.

### 7 வருமதிகள்

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|
| ஊழியர்களுக்கான கடன் | 762,915.20 | 441,873.20 |
| பொருள் இருப்புகள் | - | 345,252.00 |
| ஜெட்விங் ட்ரவெல்ஸ் | 105,200.00 | - |
| SNAV மூலம் கிடைக்க வேண்டிய தொகை | - | 6,273,477.85 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 51,921,857.27 | 56,890,546.41 |
| **மொத்தம்** | **52,789,972.47** | **63,951,149.46** |

### 8 முற்-கொடுப்பனவுகள்

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|
| விளம்பரங்களுக்கான கொடுப்பனவுகள் | 101,018.37 | 101,018.37 |
| காப்புறுதி | 149,816.60 | 88,934.51 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 82,595.52 | 66,119.92 |
| இணையத்தள பராமரிப்புக்கான கொடுப்பனவு | 10,000.00 | 10,000.00 |
| **மொத்தம்** | **343,430.49** | **266,072.80** |

# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த அண்டிற்கான

## 9 2017.12.31 ஆம் திகதிற்கான இ.மா.ப. பொருள் இருப்புகள்

| | | நிலுவை | வீதம் | மொத்தப் பெறுமானம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | ஊக்குவிப்புக்கான துண்டுப்பிரசுரங்கள் | 324 | 160 | 51,840.00 |
| 2 | கூட்டங்களை திட்டமிட்டு ஏற்பாடு செய்தல் | 2885 | 195 | 562,575.00 |
| 3 | MICE சுற்றுலா செயற்பாட்டு துண்டுப்பிரசுரங்கள் | 511 | 452 | 230,972.00 |
| 4 | கார்டென்ஸ் ஒகப் லங்கா புக்ஸ் | 9 | 4500 | 40,500.00 |
| 5 | மரப்பலகையிலான ஞாபகச்சின்ன சுவர் பலகைகள் | 1 | 637.5 | 637.50 |
| 6 | அம்பாந்தோட்டை பற்றிய துண்டுப்பிரசுரங்கள் | 727 | 210 | 152,670.00 |
| 7 | MICE சுற்றுலா பற்றிய துண்டுப்பிரசுரங்கள் | 261 | 247 | 64,467.00 |
| 8 | போஸீலேன்ட் கோப்பைகள் | 252 | 384.9 | 96,994.80 |
| 9 | இராமர் பற்றிய துண்டுப்பிரசுர நூல் | 380 | 175.77 | 66,792.60 |
| 10 | கடதாசி உறைகள் | 1198 | 91.6 | 109,736.80 |
| 11 | ஒட்டுசாதனங்கள் | 4355 | 3.5 | 15,242.50 |
| | | | | **1,392,428.20** |

## 10 வைப்புக்கள்

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா ரெலிகம் | 5,000.00 | 5,000.00 |
| C.F. த மெல் என்ட் சன்ஸ் | 75,000.00 | 75,000.00 |
| மொத்தம் | **80,000.00** | **80,000.00** |



**11** சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

| குறிப்பு | குறியீடு | விவரம் | 01.01.2017 ஆம் திகதிற்கான நிலுவை | 2017 ஆம் ஆண்டிற்கான சேர்வுகள் | 2017 ஆம் ஆண்டிற்கான மாற்றல்கள் | 2017 ஆம் திகதிற்கான நிலுவை | 01.01.2017 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம் | 31.12.2017 ஆம் திகதிற்கான தேய்மானம் | 31.12.2017 ஆம் திகதிற்கான திரண்ட தேய்மானம் | 31.12.2017 ஆம் திகதிற்கான தேறிய புத்தகப் பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3.1 | 101 | அலுவலக உபகரணங்கள் | 7,249,319.49 | 17,900.00 | | 7,267,219.49 | 5,864,497.21 | 180,874.92 | 6,045,372.13 | 1,221,847.36 |
| 3.3 | 103 | தளபாடங்கள், பொருத்துக்கள் | 1,883,047.89 | 121,000.00 | | 2,004,047.89 | 1,232,811.58 | 105,610.18 | 1,338,421.76 | 665,626.13 |
| 3.4 | 110 | வாகனங்கள் | 9,995,500.00 | (158,500.00) | | 9,837,000.00 | 6,748,718.25 | 750,000.00 | 7,498,718.25 | 2,338,281.75 |
| | | உப மொத்தம் | **19,127,867.38** | **(19,600.00)** | | **19,108,267.38** | **13,846,027.04** | **1,036,485.10** | **14,882,512.14** | **4,225,755.24** |



# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த அண்டிற்கான

## 12 நீண்டகால முதலீடு

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---:|---:|
| இ.வ. நிலையான வைப்பு - 76093078 | 10,300,000.00 | 10,300,000.00 |
| இ.வ. நிலையான வைப்பு - 76075215 | 19,492,107.26 | 16,348,658.01 |
| **மொத்தம்** | **29,792,107.26** | **26,648,658.01** |

## 13 கடன்களும் அட்டுறு செலவுகளும்

| விடயம் | 2017 (ரூ.) | 2016 (ரூ.) |
|---|---:|---:|
| இ.சு.அ.அ.ச. நலன்புரிச் சங்கம் | 5,000.00 | 5,100.00 |
| ஶ்ரீ லங்கா ரெலிகம் | 24,329.73 | - |
| ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | - | 290,849.00 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி. | 110,980.00 | 193,861.40 |
| செலுத்த வேண்டிய செலுத்துநர் வரி | 4,469.00 | (571.00) |
| போகனிக்ஸ் ஓகில்வி | - | 1,785.93 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி. | 13,317.60 | 32,839.13 |
| அமெரிகென் ப்ரிமியம் | - | (0.88) |
| GARI வின்டெர் ரிசேர்ச் | - | 47,000.00 |
| TIIKM - சமூக விஞ்ஞானம் | 60,000.00 | - |
| SAARC சட்ட மாநாடு | 80,000.00 | - |
| IBTM கண்காட்சிக் கொட்டகை நிர்மாணம் | 3,153,000.00 | - |
| கணக்காய்வாளர் அதிபதி | 300,000.00 | - |
| க்ளோபெல் எகெடெமிக் ரிசேர்ச் | - | 91,000.00 |
| STC | 3,173,302.50 | - |
| டயலொக் ப்ரோட்பேன்ட் | 5,417.75 | - |
| மொபிட்டெல் ப்ரைவட் லிமிற்றட் | 9,980.27 | - |
| இலங்கை மருத்துவர் சங்கம் | - | 250,000.00 |
| **மொத்தம்** | **6,986,796.85** | **864,863.58** |

# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த அண்டிற்கான

## 15 ஏனைய வருமானம்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| ஊழியர் கடன் மீதான வட்டி வருமானம் | 25,621.00 | 30,000.00 | 21,188.00 | 50,000.00 |
| பங்குபற்றல் கட்டணங்கள் | 4,475,000.00 | 4,020,000.00 | 5,330,000.00 | 3,000,000.00 |
| கடன் வைப்பு வட்டி | 4,218,261.31 | 4,950,000.00 | 2,174,173.38 | 3,000,000.00 |
| IATO பங்குபற்றல் கட்டணங்கள் | 240,000.00 | - | - | - |
| மீள்விலைமதிப்பீட்டு நட்டம் | (158,500.00) | - | - | - |
| நிதி முகாமை மீதான வட்டி | 6,796,256.29 | - | 3,603,154.57 | - |
| மொத்தம் | **15,596,638.60** | **9,000,000.00** | **11,128,515.95** | **8,300,000.00** |

## 16 வேதனாதிகள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| ஊழியர்களின் சம்பளங்கள் | 5,648,061.00 | 8,000,000.00 | 6,352,892.00 | 7,000,000.00 |
| அமைய சேவை வேதனாதிகள், ஏனைய கொடுப்பனவுகள் | | 597,225.00 | 1,000,000.00 | 380,262.71 |
| தலைவரின் கொடுப்பனவுகள் | 1,010,000.00 | 1,080,000.00 | 960,000.00 | 1,080,000.00 |
| தலைவருக்கான எரிபொருள், வாகன வாடகை | 764,400.00 | 700,000.00 | 590,350.00 | 600,000.00 |
| ஊழியர்களுக்கான மேலதிகநேர கொடுப்பனவுகள் | 175,844.00 | 300,000.00 | 257,982.97 | 300,000.00 |
| ஊழியர் சேமலாப நிதி | 792,137.25 | 700,000.00 | 678,108.75 | 600,000.00 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 153,257.44 | 200,000.00 | 140,151.71 | 200,000.00 |
| ஊழியர்களின் நலன்புரி விடயங்கள் | 148,183.10 | 600,000.00 | 482,099.03 | 600,000.00 |
| இலங்கை சுற்றுலாவுக்கான பங்களிப்பு | 231,207.50 | 200,000.00 | 51,200.00 | 100,000.00 |
| ஊழியர்களுக்கான சீருடைகள் | 231,223.65 | 200,000.00 | 166,600.00 | 200,000.00 |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவு | 190,958.00 | 400,000.00 | 116,283.00 | 400,000.00 |
| பணிக்கொடை | 247,032.50 | - | 215,857.50 | - |
| கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 388,929.00 | 700,000.00 | 290,849.00 | 600,000.00 |
| ஊழியர்களுக்கான போக்குவரத்து எரிபொருள் கொடுப்பனவுகள் | 1,662,379.00 | 2,000,000.00 | 1,136,160.00 | 1,800,000.00 |
| மொத்தம் | **12,240,837.44** | **16,080,000.00** | **11,818,796.67** | **13,880,000.00** |

# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த அண்டிற்கான

### 17 பயன்படுத்தப்பட்ட நுகர்வுப்பொருட்களும் வழுங்கல்களும்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| அச்சீடும் காகிதாதிகளும் | 374,388.23 | 500,000.00 | 837,768.09 | 650,000.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 575,967.67 | 800,000.00 | 553,886.43 | 700,000.00 |
| தபால் மற்றும் குரியர் சேவைகள் கட்டணம் | 8,885.00 | 100,000.00 | 26,323.55 | 200,000.00 |
| பொது அலுவலகச் செலவுகள் | 621,705.91 | 500,000.00 | 102,555.10 | 500,000.00 |
| காப்புறுதி | 1,426,618.97 | 1,400,000.00 | 913,054.79 | 1,000,000.00 |
| அலுவலகப் பராமரிப்பு | 227,342.25 | 400,000.00 | 2,132,696.95 | 400,000.00 |
| வாகனங்களுக்கான எரிபொருள் | 158,349.00 | 700,000.00 | 357,869.50 | 600,000.00 |
| வாகனங்கள் பராமரிப்பு, பழுதுபார்ப்புகள் | 565,475.00 | 400,000.00 | 289,648.28 | 300,000.00 |
| நானாவிதச் செலவுகள் | 17,724.89 | 200,000.00 | 25,389.60 | 200,000.00 |
| பதிவழிக்கப்பட்டவை | - | - | 450,553.57 | - |
| அலுவலக வாடகை | 1,320,000.00 | 1,320,000.00 | 1,320,000.00 | 1,320,000.00 |
| **மொத்தம்** | **5,296,456.92** | **6,320,000.00** | **7,009,745.86** | **5,870,000.00** |

### 18 சுற்றுலா சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய செலவினம்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு சுற்றுலா விளம்பரங்கள்/ சுற்றுலா சந்தைகள் | 54,685,870.03 | 95,500,000.00 | 57,587,624.38 | 100,700,000.00 |
| அச்சீடு/வழுங்கல் | 3,065,473.80 | 9,200,000.00 | 577,021.82 | 13,050,000.00 |
| விளம்பரம் | 1,205,913.37 | 5,950,000.00 | 3,493,674.35 | 6,250,000.00 |
| இ.மா.ப. இணையத்தளம் | 222,938.58 | 10,060,000.00 | 43,254.97 | 145,000.00 |
| ஏனைய சுற்றுலா சந்தைப்படுத்தல் செலவுகள் | 97,647.35 | 500,000.00 | 531,124.98 | 500,000.00 |
| நிகழ்ச்சிகளுக்கான உதவிகள் | 7,260,734.30 | 15,000,000.00 | 10,005,399.11 | 15,000,000.00 |
| பாகம் சுற்றுலா பயணங்கள் | - | 6,800,000.00 | 207,725.00 | 4,000,000.00 |
| விஷேட கருத்திட்டங்கள், செயற்பாடுகள் | 13,050,664.72 | 55,000,000.00 | 5,780,404.95 | 10,000,000.00 |
| SNAV 2016 | - | | 24,712,206.67 | 55,000,000.00 |
| **மொத்தம்** | **79,589,242.15** | **198,010,000.00** | **102,938,436.23** | **204,645,000.00** |

# நிதிக் கூற்றுக்கள்

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

## 19 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| ICCA உறுப்புரிமை | 492,592.09 | 500,000.00 | 1,023,085.69 | 700,000.00 |
| தரவுத்தளப் பராமரிப்பு | - | 300,000.00 | - | 500,000.00 |
| ICCA மாநாடு | 855,845.31 | 2,200,000.00 | - | - |
| இ.மா.ப. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 2,456,292.75 | 10,000,000.00 | - | 5,000,000.00 |
| மாநாட்டு கேள்வி சார் உதவிகள் | 153,475.00 | 15,000,000.00 | 176,290.00 | 1,200,000.00 |
| மொத்தம் | **3,958,205.15** | **28,000,000.00** | **1,199,375.69** | **7,400,000.00** |

## 20 ஏனைய செலவுகள்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 664,321.00 | 1,225,000.00 | 549,950.00 | 1,225,000.00 |
| தொழில்சார் கட்டணங்கள் | 303,000.00 | 400,000.00 | 215,875.00 | 300,000.00 |
| மொத்தம் | **967,321.00** | **1,625,000.00** | **765,825.00** | **1,525,000.00** |

## 21 நிதிசார் ஆகுசெலவுகள்

| விடயம் | உண்மையான 2017 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2017 | உண்மையான 2016 (ரூ.) | வரவுசெலவுத்திட்டம் (ரூ.) 2016 |
|---|---|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 9,560.00 | 50,000.00 | 14,725.13 | 60,000.00 |
| மொத்தம் | **9,560.00** | **50,000.00** | **14,725.13** | **60,000.00** |



# தேறிய சொத்துக்களிலுள்ள/ஒப்புரவுகளிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

கட்டுப்படுத்தும் நிறுவன உரிமையாளர்களுக்கு சேரவேண்டிய தொகை

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. | திரண்ட மிகைகள்/ (பற்றாக்குறைகள்) ரூ. | மொத்தத் தேறிய சொத்துக்கள்/ ஒப்புரவுகள் ரூ. |
|---|---|---|---|
| முன்கொணரப்பட்ட 2016 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிலுவை | 6,433,492.69 | 249,523,638.14 | |
| சுற்றுலா அபிவிருத்தி நிதி | | (40,000,000.00) | |
| குறித்த ஆண்டிற்கான மிகை | | 69,511,190.46 | |
| 2017 திசம்பர் 31 ஆம் திகதிற்கான C/F நிலுவை | **6,433,492.69** | **279,034,828.60** | **285,468,321.29** |





# காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

2017 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

| | | 2017 | | 2016 |
|---|---|---|---|---|
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல் | 69,511,190.46 | - | 30,895,865.14 | - |
| மிகை/(பற்றாக்குறை) | | | | |
| காசு சாராத நகர்வுகள் | | | | |
| தேய்மானம் | 1,036,485.10 | - | 1,763,470.26 | - |
| கிடைக்க வேண்டிய கணக்குகளிலுள்ள அதிகரிப்பு/குறைவு | 11,136,966.99 | - | (19,292,577.98) | - |
| நி.வை.வ. வரியிலுள்ள அதிகரிப்பு/குறைவு | - | 3,250.00 | - | - |
| விழா முற்பணத்திலுள்ள அதிகரிப்பு/குறைவு | - | 2,500.00 | - | - |
| முற்கொடுப்பனவுகளிலுள்ள அதிகரிப்பு/குறைவு | (77,627.69) | - | 19,791.03 | - |
| ஊழியர்களுக்கான கடன்களிலுள்ள அதிகரிப்பு/குறைவு | (321,042.00) | - | 114,816.00 | - |
| செலுத்த வேண்டிய கணக்குகளிலுள்ள அதிகரிப்பு/குறைவு | 6,121,933.27 | - | 545,708.87 | - |
| பொருட்கள் இருப்பிலுள்ள அதிகரிப்பு/குறைவு | (1,047,176.20) | - | (345,252.00) | - |
| பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டிலுள்ள அதிகரிப்பு/குறைவு | 247,032.50 | - | (278,295.50) | - |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள் - | 17,096,841.97 | - | (17,466,589.32) | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | 19,600.00 | - | (318,283.60) | - |
| கட்டிடங்கள் மினுக்கல்கள் | - | 2,020,565.00 | - | - |
| நிலையான வைப்பு | (3,143,449.25) | | (1,348,658.01) | - |
| முற்பணக் கொடுப்பனவு | - | 4,733,855.70 | - | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(3,123,849.25)** | | **5,087,479.09** | |
| மீள்ளிப்பு - உள்நாட்டு இறைவரி - VAT | - | 447,303.57 | 447,303.57 | - |
| காசும் காசு ஒப்புகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 83,484,183.18 | - | 18,964,058.48 | - |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும் | 122,493,225.80 | - | 103,529,167.32 | - |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | **205,977,408.98** | **-** | **122,493,225.80** | **-** |

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. : ரீஜபீ/ஏ/எஸ்எல்சீபீ/01/17/03
ඔබේ අංකය / உமது இல. / Your No. :
දිනය / திகதி / Date : 2018 ஒக்தோபர் 15

தலைவர்,
இலங்கை மாநாட்டுப் பணியகம்,

**இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்யணிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 3,158,500 தொகை அந்தக் கணக்கிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் மீள் மதிப்பீட்டு நட்டமாக ரூபா 158,500 தொகை விரிவான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டின் மிகை ரூபா 158,500 இனாலும், மீள் மதிப்பீட்டு நட்டம் ரூபா 3,000,000 இனாலும் குறைத்தும் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 3,158,500 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 1,249,988 தொகை நிறுத்தி வைத்தல் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வட்டி வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 6,390,756 கிரயத்தையுடைய அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பொருத்திகளும் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை.

3. நிதி மீளாய்வு

---

3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 69,511,190 மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,895,865 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 38,615,325 தொகையினால் வளர்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது வர்த்தகச் செலவுகள் ரூபா 23,349,194 இனால் குறைவடைந்தமை மற்றும் வருமானம் ரூபா 15,984,164 தொகையினால் அதிகரித்திருந்தமை என்பன மேற்கூறிய நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 60,811,425 தொகையான மிகை 2016 ஆண்டு வரையில் ரூபா 30,895,865 தொகை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீண்டும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 69,511,190 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டில் ரூபா 71,320,070 தொகையான பணியகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 44,697,026 தொகை வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 81,471,882 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கையின் (இ) உபபிரிவின் பிரகாரம் உரிய ஆண்டின் பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், (Activity Plan), அமுல்படுத்தும் காலப்பகுதி (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவு (Output / Outcome) அதில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், பணியகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ஆண்டின் போது அடையப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் போதியளவான தகவல்களை உள்ளடக்கி செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(i) சர்வதேச, வலயம் சார் மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடாத்தும் இடம் ஒன்றாக மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய பிரயாண முடிவு எல்லை ஒன்றாக இலங்கையை ஒருங்கிணைந்தலுடனும் ஒத்துழைப்புடனும் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாத்துறை சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் விவகாரங்களை மேற்கொள்வதற்காக பொறுப்பு ஏற்பதற்காக திட்டமிடப்பட்ட பொதுக் கொள்கையொன்றினை ஏற்படுத்துதல்.

(ii) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலா பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு தொழில்சார் நியமங்களை தீர்மானித்தல் மற்றும் அந்த நியமங்களை பேணுவதை வலுப்படுத்தல்.

(iii) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்கள் தொடர்பாக பல்வேறு துறைகளில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தொகுதிகளில் நபர்களின் அல்லது அமைப்புக்களின் தொழில்சார் திறன்களை அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்.

(iv) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்களை அபிவிருத்தி செய்யும் மற்றும் மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிகள் அல்லது அமைப்புக்களுடன் இணைதல், அவற்றில் அங்கத்துவத்தை பெறல் அல்லது அந்த ஏதேனும் சங்கங்கள் அல்லது அமைப்புக்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளல்.

(v) இலங்கையைப் போலவே வெளிநாடுகளிலும் இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுப் பிரயாண சேரிடம் ஒன்றாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்துவதற்கான பணியகத்தில் வழிகாட்டல் வழங்குதல்.

(vi) உபசரிப்பு சேவை உட்பட போதியளவான, ஈர்க்கக்கூடிய மற்றும் செயற்திறனுள்ள சுற்றுலா சேவையை, இடையறாமல் நடத்தக் கூடிய விதமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல்.

(ஆ) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 09 பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 312.45 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 84.45 மில்லியன் அதாவது 27 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்பாடுகளின் கீழ் 128 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 84 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

----------------------------------------------------

2017 செப்தெம்பர் மாதம் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் ரூபா 7,005,069 செலவினத்தைச் செய்து நடாத்தப்பட்ட MEEDEX TRADE FAIR மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய உள்நாட்டு பிரதிநிதிகளால் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையம் அமைக்கப்பட்ட கொட்டகைக்காக நான்கு பேர்கள் மாத்திரம் சமூகமளித்தமையும், முதலீட்டு விளைவுகள் பூச்சியமாக இருந்தமையும், மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக தோல்வியடைந்தமையும், அவர்களின் பின்தொடர் அறிக்கைகளின் கருத்துரைகளின் கீழ் பணியகத்திற்குக் அறிவிக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டடிருந்ததா என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

## 4.3 நிதியத்தின் குறை பயன்பாடு

------------------------------------------------

மீளாய்வாண்டின் போது நிதிய முகாமைத்துவக் கணக்கில் ரூபா 137,737,994தொகையான சராசரி காசு மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்தப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீடொன்றில் ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

--------------------------------------------

ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தரொருவர் பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு 2016 திசெம்பர் முதல் 2017 சனவரி வரையான காலத்திற்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 483,372 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் திசெம்பர் 31 வரை அந்தப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் முகாமைத்துவ பரிசோதனை மற்றும் அபிவிருத்திப் பதவிகளும் 03 வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் கொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு "2030 இன் நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் பணியகத்தால் புதிய விடயப்பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக அறிவித்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் இலக்கை அடைய வேண்டிய கட்டங்களும் இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டமையை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு விடயங்களுக்காக உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பபட்டிருக்கவில்லை.

6.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கொட்டகை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,732,588 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதும், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.1 இன் பிரிவின் பிரகாரம் முறையாகத்

தயாரிக்கப்பட்ட ேள்வி ஆவணங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீளாய்வு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2006 பெறுகை கைநூலின் மேலதிகம் இன் 2.14.1 இன் பிரகாரம் கேள்வி கோரல் மற்றும் கேள்வி கோரும் முறைமைக்காக திணைக்கள பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.7.1 இன் பிரகாரம் முறையாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கடிதமும் அவதானிக்கப்படவில்லை.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீட்டிற்கும் உள்ளவாறான எண்ணிக்கைக்கும் இடையே 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6.4 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

------------------------------------------------------------------------------------------

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய பணியகத்தின் ஆண்டறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டிற்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையிலான முரண்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) வெளிநாட்டு மேம்பாட்டிற்காக பங்குபற்றிய உள்நாட்டு முகவர்களின் பின்தொடர் அறிக்கை பெறப்படாமை. |
| | (ii) மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியின் போது பங்குபற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கை பெறப்படாமை. (Satisfaction Report) |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

SLCB

# இலங்கை

## இணக்கப்பாட்டுப் பணியகம்

**முகவரி :**
4ஆம் மாடி, ஹோட்டல் பாடசாலை கட்டிடம்,
இல 78, காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை.

தொலைபேசி : + 94 11 4865050/1 2440002

தொலைநகல் : + 94 11 2472985

மின்னஞ்சல் முகவரி : (s) : slcb@sltnet.lk

இணைய முகவரி : www.visitsrilanka.net